**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் வால்பாறை</u>**

முன்னிலை : திருமதி.என்.மீனாட்சி, பி.ஏ., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், வால்பாறை.
2026 ஆம் வருடம் மார்ச் திங்கள் 12 ஆம் நாள் வியாழக்கிழமை
விசுவாசுக வருடம் மாசி மாதம் 28 ஆம் நாள்
சுருக்குமுறை வழக்கு எண்:113/2023

**வால்பாறை காவல் நிலைய குற்ற எண் : 177/2022**

CNR NO: TNCB150002442023

குற்றமுறையிடுபவர் : அரசுக்காக:– காவல் ஆய்வாளர்,
வால்பாறை காவல் நிலைய குற்ற எண் : 177/2022

எதிரியின் பெயர் : தனுஷ்கிஷன், த/பெ. மதனகோபால்,
8/384, கோ–ஆப்ரேட்டிவ் காலனி,
வால்பாறை.

<table>
<tr><td colspan="6">மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற 07.04.2021 நாளிட்ட R.O.C No. 814/2020 RG/F1 (P.Dis.No.36/2021) உத்தரவின்படி வழக்கின் சுருக்கம் கீழ்கண்டவாறு விவரிக்கப்படுகிறது.</td></tr>
<tr><td>வ. எண்</td><td colspan="5">வழக்கின் சுருக்கம்</td></tr>
<tr><td rowspan="2">(i)</td><td rowspan="2">எதிரியின் அடைப்பு காவல் நாட்கள் :</td><td colspan="2">எதிரியின் பெயர்</td><td>அடைப்பு காவல் நாள்</td><td>விடுவிப்பு நாள்</td></tr>
<tr><td>1</td><td>தனுஷ்கிஷன்</td><td>–</td><td>–</td></tr>
<tr><td rowspan="2">(ii)</td><td rowspan="2">புகார் தாக்கல் செய்த நாள் மற்றும் இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள் :</td><td colspan="2">புகார் தாக்கல் செய்த நாள்</td><td colspan="2">இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நாள்</td></tr>
<tr><td colspan="2">30.12.2022</td><td colspan="2">18.03.2023</td></tr>
</table>

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:09:20 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (iii) | மேல்விசாரணைக்காக வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்ப உத்தரவிடப்பட்ட நாள் | : | - | | | |
| (iv) | கு.வி.மு.ச பிரிவு 228, 240, 246 மற்றும் 251–ன் கீழ் எதிரியிடம் கேள்விகள் கேட்ட நாள் | : | 31.07.2023 | | | |
| (v) | அனைத்து பல்வகை மனுக்கள் மற்றும் அதன் முடிவுகள். முடிவுகளை எதிர்த்து மேல்நீதிமன்றத்தில் முறையீடு செய்யப்பட்டிருந்தால் அதன் முடிவுகள். கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழான மனுவை தவிர. | : | குற்றவியல் பல்வகை மனு எண் . | | மனு நாள் | முடிவு |
| | | | | | | |
| (vi) | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | : | விசாரணை செய்யப்பட்ட சாட்சிகள் பெயர் | | முதல் விசாரணை செய்யப்பட்ட நாள் | குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் |
| | | | அ.சா. 1 | மதனகோபால் | 24.09.2025 | 24.09.2025 |
| | | | அ.சா. 2 | பொன்னர் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா. 3 | ராஜம்மாள் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா. 4 | காமராஜ் | 09.10.2025 | 09.10.2025 |
| | | | அ.சா. 5 | சாமிக்கண்ணு | 09.10.2025 | 09.10.2025 |

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:09:28 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | அ.சா. 6 | கருப்பசாமி | 17.11.2025 | 17.11.2025 |
| | | | அ.சா. 7 | ராஜேந்திரன் | 17.11.2025 | 17.11.2025 |
| | | | அ.சா. 8 | தங்கராஜ் | 04.02.2026 | 04.02.2026 |
| (vii) | கு.வி.மு.ச பிரிவு 313–ன் கீழ் எதிரியிடம் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 18.02.2026 | | | |
| (viii) | எதிரி தலைமறைவான மற்றும் முன்னிலையான / முன்னிலைபடுத்தப்பட்ட விபரங்கள் | : | - | | | |
| (ix) | மேல்நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்தால் அதன் முடிவுகள். | : | அமர்வு நீதிமன்ற கு.ப.ம.எண்கள் | உயர்நீதிமன்ற எண் மற்றும் தடையாணை நாள் | முடிவு | |
| | | | - | - | - | |
| (x) | குற்றத்தின் சாராம்சம் | : | 13.10.2022–ம் தேதி மதியம் 12.10 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்திற்குட்பட்ட குரங்குமுடி KGR எஸ்டேட் வாதிக்கும், சாட்சி–1–க்கும், அவரது மனைவி பிரவீனாவிற்கும் குடும்பத்தில் பிரச்சனை இருந்து வருவதால் சாட்சி 1 தனியாக குடியிருந்து வந்தவர் KGR எஸ்டேட்டில் உள்ள தனது மனைவி பிரவீனா, மகன் தனுஷ்கிசன், மகள் நிகாரிகா ஆகியோர் தங்கியுள்ள காட்டேஜில் உள்ள தனக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்று பொருட்களை எடுக்க சாட்சி –1 வருவதைப்பார்த்த அவரது மகனான எதிரி, வாதி மதனகோபாலை கேட்டின் அருகே நின்று கொண்டு கேட்டை மூடி மதனகோபாலை உள்ளே வரவிடாமல் தடுத்துள்ள எதிரியின் இக்குற்ற செயலானது இ.த.ச.பிரிவு 341–ன் கீழ் | | | |

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.10 18:09:35 +0530

12.03.2026 DM Cum JM
Valparai

| | | | |
|---|---|---|---|
| (xi) | எதிரியின் பதில் | : | குற்றவாளி இல்லை, பொய் வழக்கு. |
| (xii) | நீதிபதியின் முடிவு | : | எதிரி மீதான இ.த.ச.பிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டுகள் பொறுத்து குற்றவாளி இல்லை என முடிவு. |
| (xiii) | நீதிபதியின் தீர்ப்பு | : | 1. எதிரி அ.சா.1–ஐ அவரது அறைக்கு செல்லவிடாமல் சட்டவிரோதமாக எதிரி தடுத்து நிறுத்தியதாக இ.த.ச. பிரிவு 341–ன் படி குற்றமிழைத்திருப்பதாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை இ.த.ச.பிரிவு 341–ன் படியான குற்றச்சாட்டிலிருந்து, குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு. 255(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.<br><br>2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.<br><br>3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |

இவ்வழக்கானது இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து 10.03.2026–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் திரு. ராமசந்திரன், B.Sc., LLM., அரசு உதவி வழக்கறிஞர், நிலை–1 அவர்களும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. M.யுகேஸ் யாது, B.A., B.L., மற்றும் S.கண்ணன், B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பினரும் எடுத்துரைத்த வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இன்று

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:09:42 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

இந்நீதிமன்றம் வழங்கும்...

**தீர்ப்புரை**

1. கடந்த 13.10.2022–ம் தேதி மதியம் 12.10 மணிக்கு வால்பாறை காவல் நிலையத்திற்குட்பட்ட குரங்குமுடி KGR எஸ்டேட் வாதிக்கும், சாட்சி–1–க்கும், அவரது மனைவி பிரவீனாவிற்கும் குடும்பத்தில் பிரச்சனை இருந்து வருவதால் சாட்சி 1 தனியாக குடியிருந்து வந்தவர் KGR எஸ்டேட்டில் உள்ள தனது மனைவி பிரவீனா, மகன் தனுஷ்கிசன், மகள் நிகாரிகா ஆகியோர் தங்கியுள்ள காட்டேஜில் உள்ள தனக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்று பொருட்களை எடுக்க சாட்சி –1 வருவதைப்பார்த்த அவரது மகனாக எதிரி , வாதி மதனகோபாலை கேட்டின் அருகே நின்று கொண்டு கேட்டை மூடி மதனகோபாலை உள்ளே வரவிடாமல் தடுத்துள்ள எதிரியின் இக்குற்ற செயலானது இ.த.ச.பிரிவு 341–ன் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றம் என்று வால்பாறை சார்பு ஆய்வாளர் கு.வி.மு.ச.பிரிவு 173(2) ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. இறுதி அறிக்கை பரிசீலனைக்கு பின் இந்நீதிமன்றத்தில் எதிரிக்கு எதிராக இவ்வழக்கை கோப்பிற்கு 19.05.2023 –ம் தேதி அன்று சுருக்குமுறை வழக்கு எண் 113/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு.204–ன்படி அழைப்பாணை அனுப்பப்பட்டு, எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் கு.வி.மு.ச.பிரிவு.207–ன் படி வழக்காவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் வழங்கி வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய, முதற்நோக்கு முகாந்திரம் இருந்ததால் கு.வி.மு.ச.பிரிவு 251–ன் படி இ.த.ச.பிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டின் சாராம்சத்தை எதிரிக்கு புரியும்படி தமிழ் மொழியில் படித்துக்காட்டி விளக்கிகூறி வினவியபோது எதிரி பொய் வழக்கு, குற்றவாளி இல்லை என்று மறுத்து, வழக்கு விசாரணை செய்யப்பட வேண்டும் என கூறினார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. பின்னர் இந்நீதிமன்றத்தில் அரசுதரப்பு வழக்கை நிரூபிப்பதற்காக அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:09:50 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசுத்தரப்பு சாட்சியத்திலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் :–**

5. கடந்த 13.10.2022–ம் தேதி வால்பாறை காவல் நிலையத்தில் அ.சா.8 சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது, வால்பாறை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலைப் பெற்று வால்பாறை அரசு மருத்துவமனை சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1–யிடம் அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் பெற்று, மனு ரசீது எண். 247/2022 வழங்கி விசாரணை செய்து உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, பின்பு 20.10.2022–ம் தேதி குற்ற எண்.177/2022, சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(ii) இ.த.ச.வின் படி அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு இவ்வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினமே சம்பவயிடம் சென்று சம்பவயிட சாட்சிகளான அ.சா.5, அ.சா.7 ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பின்னர் சாட்சிகள் அ.சா.1, அ.சா.2, அ.சா.6, அ.சா.3, அ.சா.4, அ.சா.5, அ.சா.7 ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். எதிரி மீதான சட்டப்பிரிவு 341. 294(b), 323. 506(ii) இ.த.ச.விலிருந்து சட்டப்பிரிவு 341 இ.த.ச.வாக மாற்றம் செய்து அ.சா.ஆ.6 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்துள்ளார். பின்பு விசாரணையை முடித்து எதிரிக்கு எதிராக இ.த.ச.பிரிவு 341–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். புலன்விசாரணை குறித்த அ.சா.8–ன் சாட்சியத்தோடு அரசு தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டுள்ளது.

6. அரசு தரப்பு சாட்சிகள் முடிவடைந்ததும் அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், சான்றாவணங்களிலிருந்தும் எதிரிக்கு பாதகமாக தோன்றிய சாட்சியங்களை குறித்து எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1)(b)–ன் கீழ் விசாரணை செய்த போது எதிரி அரசு தரப்பு சாட்சிங்கள் கூறுவது பொய் என்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கு என்றும் தெரிவித்து, எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் உண்டு என தெரிவிக்கப்பட்டது. எதிரி தரப்பில் சாட்சிகள் எதுவும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

MEENATCHI MURUGAN
Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:09:56 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

**7. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில்,**

1. எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள இ.த.ச. பிரிவு 341–ன் படியான குற்றச்சாட்டு அரசு தரப்பில் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

**<u>தீர்வு :–</u>**

8. இருதரப்பு வாதத்தை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி மீதான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என ஆராய்கையில்,

" கடந்த 13.10.2022–ம் தேதி மதியம் 12.10 மணிக்கு குரங்குமுடி KGR எஸ்டேட் அ.சா.1–க்கும், அவரது மனைவி பிரவீனாவிற்கும் குடும்பத்தில் பிரச்சனை இருந்து வருவதால் அ.சா.1 தனியாக குடியிருந்து வந்தவர் KGR எஸ்டேட்டில் உள்ள தனது மனைவி பிரவீனா, மகன் தனுஷ்கிசன், மகள் நிகாரிகா ஆகியோர் தங்கியுள்ள காட்டேஜில் உள்ள தனக்கு என்று ஒதுக்கப்பட்ட அறைக்கு சென்று பொருட்களை எடுக்க அ.சா.1 வருவதைப்பார்த்த அவரது மகனாக எதிரி , அ.சா.1–ஐ கேட்டின் அருகே நின்று கொண்டு கேட்டை மூடி அ.சா.1–ஐ உள்ளே வரவிடாமல் தடுத்து, இ.த.ச.பிரிவு 341–ன் படி தண்டிக்கத்தக்க குற்றமிழைத்திருப்பதாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

9. அரசு தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டும், எதிரி மீதான குற்றச்சாட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்க வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

10. எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், எதிரி அ.சா.1–ன் மகன் ஆவார். அவர்களுக்கு சொத்து சம்பந்தமாக பிரச்சனையிருந்து வருவதால் அ.சா.1 எதிரிக்கு எதிராக தவறாக புகார் கொடுத்து இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகள் பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். அ.சா.3, அ.சா.6 சாட்சிகள் அ.சா.1–யிடம் வேலை செய்பவர்கள். அவர்களது சாட்சியம் அரசு தரப்பிற்கு முரணாக உள்ளது. பார்வை மகஜர் சாட்சிகள் அரசு தரப்பிற்கு எதிராக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். குடும்ப பிரச்சனை காரணமாக அ.சா.1 கொடுத்த தவறான புகாருக்கு சரிவர புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரிக்கு எதிராக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பில் சாட்சிகள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு

நிரூபணம் செய்யவில்லை. எனவே, எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென வாதம் முன்வைத்தார்.

11. அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்ய அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் புகார் மனுவிலிருந்தும், எதிரி அ.சா.1—ன் மகன் ஆவார் என்பதும், அ.சா.1—க்கும் அவரது குடும்பத்திற்கும் சொத்து சம்பந்தமான குடும்ப பிரச்சனை இருந்து வருகிறது என்பதும், அ.சா.1 தனியாக குடியிருந்து வருகிறார் என்பதும் தெளிவாகிறது.

12. அரசு தரப்பு வழக்கின் படி, அ.சா.1—க்கும், அவரது மனைவிக்கும் குடும்ப பிரச்சனை இருந்து வருவதால் அ.சா.1 தனியாக குடியிருந்து வருவதாகவும், சம்பவதினத்தன்று அ.சா.1 தனது குடும்பத்தினர் தங்கியிருக்கும் KGR எஸ்டேட்டில் உள்ள காட்டேஜில் தனக்கென்று ஒதுக்கப்பட்ட அறைக்கு பொருட்களை எடுக்க சென்றதாகவும், அதனை பார்த்த அ.சா.1—ன் மகனான எதிரி கேட்டின் அருகே நின்று கொண்டு கேட்டை மூடி, அ.சா.1—ஐ உள்ளே வரவிடாமல் சட்டவிரோதமாக தடுத்ததாக உள்ளது.

13. புகார்தாரரான அ.சா.1 தனது சாட்சியத்தில், தனது மகனான எதிரி மாண்புமிகு உயர் நீதிமன்றத்தில் KGR எஸ்டேட்டில் உள்ள தேயிலை இலைகளை பறித்து வாட்டர்பால்ஸ் எஸ்டேட்டிற்கு விற்கலாம் என்று உத்தரவு பெற்றிருந்ததாகவும், தான் எஸ்டேட்டில் தனக்கென்று ஒதுக்கிய அறைக்கு செல்லும் போது, அந்த உத்தரவை சொல்லி கேட்டிற்குள் சென்று நின்று கொண்டதாக சாட்சியமளித்துள்ளார். இவரது சாட்சியத்தில், தான் உரிமை பெற்றுள்ள அறைக்கு செல்லும் போது, எதிரி சட்டவிரோதமாக தடுத்து நிறுத்தியதாக இல்லை. மாண்புமிகு உயர் நீதிமன்ற உத்தரவை சொல்லி கேட்டிற்குள் சென்று நின்று கொண்டார் என சாட்சியமளித்துள்ளார்.

14. மேலும், அ.சா.1 தனது சாட்சியத்தில், எஸ்டேட்டில் இருந்த 5 அறையில் ஒரு அறை தனக்கு ஒதுக்கப்பட்டிருந்ததாகவும், இன்னொரு அறை வேண்டும் என கேட்டு அந்த அறைக்கு செல்லும் போது, எதிரி அதிலிருந்த கேட்டை இழுத்து பூட்டினார் என்றும், அதில் அந்த கேட் தனது வலது பக்க தோள்பட்டையில் அடித்துவிட்டதாகவும், தன்னுடைய இன்சியலை தாங்கள் தங்கள் பெயரின் முன்னால் போட்டுக்கொண்டுள்ளதால் தன்னை உயிரோடு விடுவதாக மிரட்டியதாகவும், தான் அங்கிருந்து வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை பெற்றதாகவும், சிகிச்சையில் இருந்து

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN Date: 2026.04.10 18:10:15 +0530

போலீசார் தன்னை வந்து விசாரித்து அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் வாங்கியதாகவும் சாட்சியமளித்துள்ளார். இது அவருக்கென ஒதுக்கப்பட்டிருந்த அறைக்கு செல்லும் போது, கேட்டை பூட்டி எதிரி, அ.சா.1–ஐ தடுத்ததாக உள்ள அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக உள்ளது.

15. வழக்கு சம்பவத்தின் போது, சம்பவயிடத்தில் அ.சா.1 உயிருக்கு பயந்திருந்தபோது, தங்கள் எஸ்டேட்டில் இருக்கும் பொன்னர் மற்றும் அ.சா.1–ன் கார் டிரைவர் கருப்பசாமி என்பவரும் தடுத்து அ.சா.1–ஐ காட்டேஜ்க்கு அழைத்து சென்றதாக புகாரில் உள்ளது. மேற்படி, பொன்னர் இவ்வழக்கில் அ.சா.2–ஆகவும், கருப்பசாமி அ.சா.6–ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா.6–ன் சாட்சியத்தை பரிசீலிக்கும் போது, எதிரி அ.சா.1–ஐ சட்டவிரோதமாக தடுத்து வைத்ததாக இல்லை. அ.சா.6–ன் சாட்சியத்தில், தான் அ.சா.1–க்கு கார் ஓட்டுநராக வேலை செய்து வந்ததாகவும், சம்பவதினத்தன்று அ.சா.1–ன் எஸ்டேட்டில் உள்ள வீட்டின் முன்பு தான் காரை சுத்தம் செய்து கொண்டிருந்த போது, அ.சா.1 அவரது வீட்டிற்குள் நுழைய வந்ததாகவும், அப்போது எதிரி அ.சா.1–ஐ தடுத்து வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது வீட்டிற்குள் செல்லக்கூடாது என்று சொன்னதாக சாட்சியமளித்துள்ளார்.

16. மேலும், அ.சா.6–ன் சாட்சியத்தில், அப்போது, அ.சா.1 காரில் இருந்த சுத்தியலை எடுத்து எதிரியை அடிக்க சென்றதாகவும், எதிரி அவரை தடுத்ததாகவும், எதிரி, அ.சா.1–ன் மீது கையை வைத்து தள்ளினார் என்றும், பின்னர் அ.சா.1 நெஞ்சு வலிப்பதாக சொல்லி மருத்துவமனைக்கு சென்றதாகவும் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

17. மேலும், அ.சா.6 தனது குறுக்கு விசாரணையில்,

**" எத்தனை வருடங்களாக அ.சா.1–டம் நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் 6 மாதங்களாக பணிபுரிந்து வந்தேன். மதனகோபால் தான் சுத்தியலை எடுத்து எதிரியை அடிக்க சென்றாரா என்றால் ஆமாம். அதற்கு முன்பாக என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். "** – என அ.சா.1 எதிரியை சுத்தியலை வைத்து அடிக்க சென்றதாக அளித்துள்ள சாட்சியம் அரசு தரப்பு வழக்கின் மீது சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

18. சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகளாக முன்னிடப்பட்டுள்ள அ.சா.3 தனது முதல் விசாரணையில், தான் அ.சா.1–ன் எஸ்டேட்டில் வேலை செய்து வருவதாகவும், ஒரு நாள் மதியம் 03.30 மணியளவில் அ.சா.1–ன் வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது, அ.சா.1–ன் வீட்டின் வெளியே கதவு

அருகே நின்று கொண்டிருந்தார் என்றும், எதிரி அவரை உள்ளே வரவிடாமல் கதவை அடைத்து தடுத்துக்கொண்டிருந்தார் என்றும் சாட்சியமளித்துள்ள போதிலும், தனது குறுக்கு விசாரணையில்,

**" அ.சா.1 மதனகோபால் அன்றைய தினம் கையில் சுத்தியல் வைத்திருந்தாரா என்றால் ஆமாம். சுத்தியலை வைத்து தான் எதிரியை கதவை திறக்க சொன்னாரா என்றால் ஆமாம். அதனால் தான் எதிரி கதவை திறக்க மறுத்தார். "** – என அரசு தரப்பிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

19. அ.சா.2–ம், கண்ணுற்ற சாட்சியாக முன்னிடப்பட்டுள்ள மற்றொரு சாட்சியான அ.சா.4–ம், அ.சா.1–யும், எதிரியையும் தெரியும் என்றும், வழக்கு சம்பவம் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள்.

20. பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.5 தனது சாட்சியத்தில், போலீசார் தனது ஓனர் மற்றும் அவரது மனைவிக்கு இடையேயான பிரச்சனை சம்பந்தமாக விசாரித்து பார்வை மகஜரிலுள்ள அ.சா.ஆ.2 கையொப்பத்தை வாங்கியதாகவும், மற்றொரு சாட்சியான அ.சா.7 தனது சாட்சியத்தில், பார்வை மகஜரிலுள்ள கையொப்பம் தன்னுடையது அல்ல என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக பிறழ்சாட்சியமளித்துள்ளார்கள். அரசு தரப்பு வழக்கிற்கு விரோதமாக பிறழ்சாட்சியம் அளித்துள்ள அ.சா.2, அ.சா.4, அ.சா.5, அ.சா.7 சாட்சிகளை அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்த போதிலும், அரசு தரப்பு வழக்கிற்கு சாதகமாக இவர்களது சாட்சியம்இல்லை.

21. மேலும், இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கும் போது, புகார் வாக்குமூலத்தில் வழக்கு சம்பவத்தில் தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக வால்பாறை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அ.சா.1 சேர்ந்ததாகவும், இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான அ.சா.8, அ.சா.1–னிடம் வால்பாறை அரசு மருத்துவமனைக்கு சென்று அவர் சிகிச்சையில் இருந்த போது, அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலத்தை பெற்றதாகவும் காணப்படும் நிலையில் அ.சா.1–க்கு சிகிச்சையளித்த மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்பதும், அதுகுறித்து அரசு தரப்பில் விளக்கமளிக்காதததும், இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அ.சா.8 சார்பு ஆய்வாளர் இவ்வழக்கின் புலன் விசாரணை மேற்கொண்டு, குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளதும் இவ்வழக்கின் நேரிய புலன் விசாரணையின் மீது பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

MEENATCHI MURUGAN

Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:10:48 +0530

12.03.2026

DM Cum JM
Valparai

22. மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், எதிரிக்கு எதிரான அ.சா.1–ஐ அவரது அறைக்கு செல்லவிடாமல் சட்டவிரோதமாக எதிரி தடுத்து நிறுத்தியதாக , இ.த.ச.பிரிவு 341–ன் கீழான குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**23. எனவே இறுதியாக,**

1. எதிரி அ.சா.1–ஐ அவரது அறைக்கு செல்லவிடாமல் சட்டவிரோதமாக எதிரி தடுத்து நிறுத்தியதாக இ.த.ச. பிரிவு 341–ன் படி குற்றமிழைத்திருப்பதாக எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களின் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என இந்நீதிமன்றம் தீர்மானித்து, எதிரியை இ.த.ச.பிரிவு 341–ன் படியான குற்றச்சாட்டிலிருந்து, குற்றவாளி இல்லை என முடிவு செய்து, எதிரியை கு.வி.மு.ச.பிரிவு. 255(1)–ன் கீழ் எதிரியை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

2. இவ்வழக்கில் தீர்ப்பின் மீது மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராவதற்காக பெறப்பட்ட கு.வி.மு.ச. 437(A) பிணைப்பத்திரமானது இன்றைய தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு அமலில் இருக்கும் என்றும் பின்னர் தானாக ரத்தாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 12–ம் நாள் என்னால் அவையறிய திறந்த இந்நீதிமன்றத்தில் பகரப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:10:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர் வால்பாறை.

12.03.2026

DM Cum JM
Valparai

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | |
|---|---|
| அ.சா.1 | மதனகோபால் |
| அ.சா.2 | பொன்னர் |
| அ.சா.3 | ராஜம்மாள் |
| அ.சா.4 | காமராஜ் |
| அ.சா.5 | சாமிக்கண்ணு |
| அ.சா.6 | கருப்பசாமி |
| அ.சா.7 | ராஜேந்திரன் |
| அ.சா.8 | தங்கராஜ் (உதவி ஆய்வாளர்) |

**அரசுதரப்பு சான்றாவணங்கள் :-**

1. அ.சா.ஆ. 1 – புகார் மனு
2. அ.சா.ஆ. 2 – பார்வை மகஜரிலுள்ள 1-வது சாட்சி கையொப்பம்
3. அ.சா.ஆ. 3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ. 4 – பார்வை மகஜர்
5. அ.சா.ஆ. 5 – மாதிரி வரைபடம்
6. அ.சா.ஆ. 6 – சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை

**சான்றுப் பொருட்கள்**:- இல்லை

**எதிரி தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்**:- இல்லை.

**குறிப்பு:-**

1. எந்த சாட்சியும் மூன்று முறைக்குமேல் அழைக்கப்படவில்லை.
2. இவ்வழக்கின் முடிவு குறித்து காவல்துறைக்கு தெரிவிக்கப்பட்டது.

MEENATCHI MURUGAN Digitally signed by MEENATCHI MURUGAN
Date: 2026.04.10 18:11:05 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.

12.03.2026

DM Cum JM
Valparai

12.03.2026

DM Cum JM
Valparai